பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

22 04 2025 7 15
செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- சவுதி அரேபிய மன்னர் அழைப்பின்பேரில் பிரதமர் திரு. நரேந்திர மோடி அந்நாட்டுக்கு இரண்டு நாள் அரசுமுறைப் பயணம் மேற்கொள்கிறார்.
- 'பூமியைப் பாதுகாப்போம்' மாநாட்டை புதுதில்லியில் இன்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தொடங்கி வைக்கிறார்.
- விமானப் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்த அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.
- ஒரே நாடு – ஒரே தேர்தல் தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் கூட்டம் இன்று நடைபெற உள்ளது.
- உலகக்கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் சிம்ரன் ப்ரீத்கவுர் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று சவுதி அரேபியா செல்கிறார்.

சவுதி அரேபிய பட்டத்து இளவரசரும், பிரதமருமான திரு. முகமது பின் சல்மானின் அழைப்பை ஏற்று பிரதமர் அங்கு செல்கிறார்.

தமது இந்தப் பயணத்தின்போது பிரதமர் திரு. மோடி, இந்தியா – சவுதி அரேபியா இடையேயான நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் வர்த்தகம், எரிசக்தி, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் அந்நாட்டு பிரதமருடன் பேச்சு நடத்துவார்.

வரும் 2030ஆம் ஆண்டுக்கான பொருளாதார ஊக்குவிப்பு திட்டங்களை சவுதி அரேபியா மேற்கொண்டிருக்கும் நிலையில் பிரதமரின் இந்தப் பயணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இந்தியாவின் உலகளாவிய நாடுகளுடன் நல்லுறவு, பாலின சமத்துவம் குறித்த இலக்கை எட்டும் வகையில் பிரதமரின் இந்தப் பயணம் அமையும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இந்தியா வந்துள்ள அமெரிக்க துணை அதிபர் திரு. **J.D. Vance**-க்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று இரவு விருந்தளித்து கௌரவித்தார்.

முன்னதாக அமெரிக்க துணை அதிபருடனான பேச்சின்போது இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு துறைகளில் நீடித்து வரும் ஒத்துழைப்பு குறித்து அவர்கள் ஆலோசனை மேற்கொண்டனர்.

கடந்த ஜனவரி மாதம் தாம் மேற்கொண்ட வாஷிங்டன் பயணத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி அமெரிக்க துணை அதிபருடன் நினைவுகூர்ந்து உரையாடினார்.

இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் குறித்தும் அப்போது ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே அமெரிக்க துணை அதிபர் திரு. ஜேடி. வான்ஸ் நேற்றிரவு ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூர் சென்றடைந்தார்.

அங்கு அவர் 3 நாட்கள் தங்கியிருப்பார் என்றும் ராஜஸ்தான் ஆளுநர் மற்றும் முதலமைச்சரை அமெரிக்க துணை அதிபர் சந்தித்துப் பேசுவார். இதையொட்டி ஜெய்ப்பூரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்துப் பேசியது தமக்கு மிகப்பெரிய கௌரவம் என்று அமெரிக்க துணை அதிபர் திரு. ஜேடி. வான்ஸ் தெரிவித்துள்ளார்.

தமது இந்தியப் பயணத்தின் முதல் நாளில் பிரதமர் தமக்கும், குடும்பத்தினருக்கும் அளித்த விருந்துக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக சமூக வலைதளத்தில் திரு. வேன்ஸ் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையேயா நட்புறவை மேலும் வலுப்படுத்த தமது விருப்பத்தையும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

'பூமியைப் பாதுகாப்போம்' மாநாட்டை புதுதில்லியில் இன்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தொடங்கி வைக்கிறார்.

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் மூங்கிலின் திறனை மேம்படுத்துவது குறித்து இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட உள்ளது.

இந்திய உணவு மற்றும் வேளாண் துறையுடன் தனியார் அமைப்பும் இணைந்து நடத்தவுள்ள இந்த மாநாட்டில் நாடு முழுவதும் இருந்து ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்கிறார்கள்.

மத்திய அமைச்சர்கள் திரு. நிதின் கட்கரி, பூபேந்தர் யாதவ் ஆகியோரும் இதில் உரையாற்ற உள்ளனர்.

<<<<>>>>

அமெரிக்க அரசுடன் இருதரப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்வது குறித்து மத்திய அரசு தீவிரமாக செயல்பட்டு வருவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக அந்நாட்டுக்கு சென்றுள்ள திருமதி நிர்மலா சீதாராமன் சான்ஃபிரான்சிஸ்கோவில் அந்நாட்டு வர்த்தக பிரதிநிதிகளை சந்தித்து உரையாடினார்.

அமெரிக்காவில் திரு. ட்ரம்ப் தலைமையிலான புதிய அரசுடன் ஆக்கப்பூர்வமான இருதரப்பு உறவுகளை இந்தியா கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடியும், அமெரிக்க அதிபரும் இந்த ஆண்டு தொடக்கத்தில் சம்மதம் தெரிவித்திருந்ததை திருமதி நிர்மலா சீதாராமன் சுட்டிக்காட்டினார்.

வரும் 2030ஆம் ஆண்டுக்குள் இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம் 500 பில்லியன் டாலர் என்ற அளவை எட்டுவதற்கான இலக்குடன் செயல்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் இந்தியா வேகமான பொருளாதார வளர்ச்சியை அடைந்திருப்பதாகவும், நிலையான அரசு தொடர்வதே அதற்கு காரணம் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

தமது பயணத்தின் தொடர்ச்சியாக அமெரிக்க அமைச்சர் மற்றும் பல்வேறு தலைவர்களையும் அவர் சந்திக்க உள்ளார்.

வாஷிங்டனில் சர்வதேச நிதியமான ஐ.எம்.எஃப் மற்றும் உலக வங்கி கூட்டங்களிலும் திருமதி நிர்மலா சீதாராமன் பங்கேற்கிறார்.

தொடர்ந்து வரும் 26ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை அவர் பெரு நாட்டிற்கு செல்கிறார்.

<<<<>>>>

கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்தியாவில் 3 நாள் அரசுமுறை துக்கம் அனுசரிக்கப்படுகிறது.

இன்று, நாளை மற்றும் போப் பிரான்சிஸ்-ன் இறுதிச் சடங்கு நடைபெறும் நாளன்று தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

விமானப் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்த அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

தில்லி விமான நிலையத்தில் நேற்று விமானப் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்டுள்ள பல்வேறு சவால்கள், ஓடுதளப் பணிகளை மேம்படுத்துதல், எதிர்பாராத சூழல்களை எதிர்கொள்ளுதல் போன்றவை குறித்து விமான போக்குவரத்துத் துறை உயர் அதிகாரிகளுடன் திரு. ராம்மோகன் நாயுடு ஆலோசனை நடத்தினார்.

பயணிகளுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைத்தல், விமானப் போக்குவரத்து செயல்பாடுகளை மேம்படுத்துதல், தில்லி விமான நிலையத்தின் முக்கியத்துவம் குறித்து அப்போது விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பேசிய திரு. ராம்மோகன் நாயுடு, விமானப் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்துவதே அரசின் உயர் முன்னுரிமை என்று குறிப்பிட்டார்.

விமான நிறுவனங்களும், உயர் அதிகாரிகளும் இதனைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

விமானப் பயணிகளுக்கான அறிவுறுத்தல்களை உரிய நேரத்தில் தெரிவிப்பதுடன் வெளிப்படைத்தன்மையை விமான நிறுவனங்கள் கடைபிடிக்க வேண்டும் என்றும் திரு. ராம்மோகன் நாயுடு கூறினார்.

<<<<>>>>

ஒரே நாடு – ஒரே தேர்தல் தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் முதல் கூட்டம் இன்று நடைபெற உள்ளது.

இன்றைய கூட்டத்தில் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு. ஹேமந்த் குப்தாவுடன் குழுவின் உறுப்பினர்கள் கலந்துரையாட உள்ளனர். தொடர்ந்து ஜம்மு-கஷ்மீர் உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு. எஸ்.என். ஷாவுடனும் அவர்கள் உரையாற்றுவார்கள்.

<<<<>>>>

சாலை விபத்தில் பாதிக்கப்படுவோரை காப்பாற்றும் நபருக்கு மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் நற்கருணை வீரர் விருதுக்கான தொகை வேலூர் மாவட்டத்தில் 5 ஆயிரம் ரூபாயில் இருந்து 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் உள்ளிட்ட 7 மாநிலங்களில் அடுத்த 2 நாட்களுக்கு வெப்ப அலை தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பீஹார், ஜார்கண்ட், கொங்கன், கோவா, மராத்வாடா, குஜராத், கேரளா, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பகுதிகளில் ஒருசில இடங்களில் தொடர்ந்து அனல் காற்று வீசும் என்றும் வானிலை அமைய அறிக்கை தெரிவிக்கிறது.

அதேநேரத்தில் அருணாச்சலப்பிரதேசம், அசாம், மேகாலயா மாநிலங்களிலும், ஒடிசா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா மாநிலங்களின் ஒருசில பகுதிகளிலும் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

கர்நாடகத்தின் உட்புறப் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<>>>>

உலக பூமி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

சுற்றுச்சூழலை பராமரித்து பூமி கிரகத்தை சமநிலையில் வைப்பதற்காக, கடந்த 1970ஆம் ஆண்டு முதல் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு 'நமது சக்தி, நமது கிரகம்' என்ற கருப்பொருளுடன் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

<<<<>>>>

உலகக்கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் மகளிர் 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் சிம்ரன் ப்ரீத்கவுர் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

பெரு நாட்டின் லிமா நகரில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் 33 புள்ளிகள் பெற்று இவர் இந்தப் பதக்கத்தை வென்றார்.

இது சர்வதேச போட்டிகளில் அவர் பெற்றுள்ள முதல் பதக்கமாகும்.

--------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி 39 ரன் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வென்றது.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் விளையாடிய குஜராத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 198 ரன் எடுத்தது.

சுப்மன் கில் 90 ரன்னும், சாய் சுதர்ஷன் 52 ரன்னும் சேர்த்தனர்.

199 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய கொல்கத்தா அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுகளை இழந்து 159 ரன் மட்டுமே எடுத்தது.

நேற்றைய ஆட்டத்தில் கொல்கத்தாவை வீழ்த்தியதன் மூலம் குஜராத் அணி 6வது வெற்றியைப் பதிவு செய்து புள்ளிப் பட்டியலில் முதலிடத்தில் தொடர்ந்து நீடிக்கிறது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் லக்னோ அணி – தில்லி அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இரவு மணி 7.30க்கு இப்போட்டி தொடங்கும்.